தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உக | பார்த்திப—ஆடி—1945—ஜூலை | மலர் ச

மகிழ்கின்றோம்.

எம் சங்கச் சார்பில் தொடங்கப்பெற்ற கரந்தைப் புலவர் கல்லூரி தோன்றிய நாட்டொட்டுக் கல்லூரியிற் பயின்று தேர்விற்குச் செல்லும் மாணவர்கள் வெற்றி பெற்று வாகை சூடி வீறுடன் மிளிர்தலையும் இம்மண்டிலத்துள்ள தமிழ்க் கல்லூரிகளுள் எம் **கரந்தைப் புலவர் கல்லூரி** தலைமை பெற்று விளங்குதலையும் சென்ற திங்கள் தமிழ்ப் பொழிலில் எடுத்துக்காட்டி விளக்கியிருந்தோம்.

எம் கரந்தைப் புலவர் கல்லூரியில் கல்வி பயின்று வரும் மாணவர்கள் கல்லூரிக்கென விதிக்கப்பெற்ற பாடநூற்களைப் பயின்று ஈண்டுச் சிறப்புறத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுதலோடு பிற தேர்வுகட்கும் சென்று வெற்றி பெற்று வருகின்றனர். சென்ற ஆண்டில் எம் கல்லூரி மாணவருள் N. R. சுந்தரராசன் M. சுந்தரேசன் என்னும் இருவரும் சைவசித்தாந்த மகா சமாசத்தாரால் நடத்தப் பெறும் "**சைவப் புலவர்**" தேர்விற்குச் சென்று தேர்வெழுதி வெற்றி பெற்றுத் திரும்பினர். இவ்வாண்டில் N. R. சுந்தரராசன் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால் நிகழ்த்தப் பெறும் **பால பண்டிதத்** தேர்விற்குச் சென்றெழுதிச் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றுள்ளார். வித்துவான் முன்னிலைத் தேர்விலும் (Preliminary) எழுதி வெற்றிபெற்றுள்ளார். விளையும்பயிர் முளையிற் றெரியும் எனும் ஆன்றோர் மூதுரைக் கேற்ப இம்மாணவர் இளமையிலேயே எல்லாத் தேர்வுகளிலும் சிறப்புறத் தேர்ச்சிபெறுகின்றார். மேலும் சிறந்து நிகழவிருக்கும் தேர்வுகளிலும் சிறப்பாகத் தேர்ச்சிபெற வேண்டித் தமிழன்னையை வணங்கி வாழ்த்துகின்றோம்.

இத்தகு முயற்சியும் ஊக்கமும் உடைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் பெற்றுள்ள எங்கரந்தைப் புலவர் கல்லூரி வளர்ந்தோங்க இந் நாட்டுச் செல்வர்கள் பொருளுதவிபுரிய வேண்டுமென வேண்டுகின்றோம்.

எம் சங்கத் தலைவர் இராவுபகதூர். A. Y. **அருளாநந்தசாமி நாடார்** அவர்களின் திருமகனார் Y. A. **அற்புதசாமிக்கு** நிகழ்ந்த திருமண நிகழ்ச்சிகளில் எம் சங்கத்தினரும் கலந்துநின்று வாழ்த்திதழ் வழங்கினர். சங்கச் சார்பில் அளிக்கப்பெற்ற வாழ்த்துப் பாவினை அடுத்த பக்கத்தில் வெளியிட்டுள்ளோம்.

பொழிலாசிரியர்,

தமிழ் மணம் ஓங்குக!

உயர்திருவாளர் இராவுபகதூர்,
A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்கள்
திருமகன்
திருவளர் செல்வன். Y. A. அற்புதசாமிக்கும்
உயர் திருவாளர்
S. A. இரத்தினசாமி நாடார் அவர்கன்
திருமகள்
திருவளர் செல்வி. நம்பிக்கை மேரிக்கும்
நிகழ்ந்த திருமண நன்னாளில் மணமக்கட்களித்த

*வாழ்த்துப்பா.

திருவளருங் கரந்தையினிற் றிகழ்கின்ற தமிழ்ச்சங்கம் சிறப்புற் றோங்கிப்
பெருகுபுகழ் கொளநிற்கும் பேராளன்! இச்சங்கம் பெட்போ டன்ற
உரிமைமிகும் எங்கரந்தை உரன்புலவர் கல்லூரி உயர வேண்டி
வருமிளைய மாணவர்க்கு வளமார்நல் உணவளிக்கும் வள்ளல்! வாழி!!

சங்கமெனி லிக்கரந்தைத் தமிழ்ச்சங்க மெனச்சான்றோர் சாற்றும் வண்ணம்
பொங்குபுகழ் படைத்தொளிரிப் பெருஞ்சங்கத் திவன்றலைமை பூண்ட பின்னர்
எங்களுளம் களிதுள்ள இருநிலத்தோர் பெரிதுள்ள எங்கல் லூரி
தங்குபுகழ் கொளும்வண்ணம் தனிமாடம் அமைப்பனெனுந் தலைவன்! வாழி!

எத்துணையோ பெருஞ்செல்வர் இருந்தார்கள் இருக்கின்றார் இருந்து மென்ன?
அத்துணையோர் தங்களுளும் யார்வரையா தளித்து வந்தோர்? அக்கா லத்தே
ஒத்தபெருங் கொடைப்பாரி உயர்நள்ளி ஒருருவி லுள்ளா ரென்றே
எத்தலமும் போற்றவிவண் ஈகையினிற் சிறந்தொளிரும் எங்கோ! வாழி!

இத்தகுநற் பெற்றிபல எவர்க்குமிலாப் பண்புபல இனிதிற் பெற்ற
வித்தகனார் நயனெல்லாம் விளங்கவறிந் திந்நகர மேலோர் கூடி
இத்தலமார் நகர்மன்றத் திணையற்ற தலைவனென ஏற்றா ரென்னின்
அத்தன்இவன் புகழெல்லாம் அறையகிலேம் அவனிமிசை அமைந்து வாழி!

சொல்லியவிந் நலமாருஞ் செம்மல்அரு ளாநந்தர் செய்த நோன்பின்
நல்லுருவா மெனவிளங்கும் நம்பிஅற் புதசாமி நலமே விஞ்சச்
சொல்லரிய அறம்வளரச் சொல்லேற்குந் திறலுநற் றோற்றம் ஓங்க
மெல்லியலார் நம்பிக்கை மேரியினை மணமியைந்த வீறு நன்றே!

நன்றுபுரி இரத்தினஞ்செய் நற்றவத்தே தோன்றியவிந் நங்கை நல்லாள்!
ஒன்றியபன் னலனெல்லாம் ஒருங்கமைந்து மிளிர்கின்ற ஒப்பி லாதாள்!
மன்றினிடைச் சான்றோர்முன் மணமியைந்தார் இருவருமே வயங்கி நன்றே
துன்றியநற் கண்மணிபோல் தூயதமிழ்ப் பண்ணிசைபோற் றுன்னி வாழி!!

வாழியிறை யருளாலிம் மணமக்கள் மகப்பெற்று வாழி! வாழி!!
வாழியிவ ரிருவரையும் மணமியைத்து மகிழ்வித்தோர் வாழி! வாழி!!
வாழியரித் திருமணத்தில் வதியுநல மக்களெலாம் வாழி! வாழி!!
வாழியர்நற் கரந்தையினில் வளர்சங்கம் என்றென்றும் வாழ்க மாதோ!

தஞ்சை, கரந்தை
11—7—'45.

இங்ஙனம்,
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார்.

*இப்பாக்களை இயற்றியவர் : பொழிலாசிரியர், கோ. சி. பெரியசாமிப் புலவர்.

படிக்காசுத் தம்பிரான்

மேலைச்சிவபுரி, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர்,
ஆ. வ. இராமநாதச் செட்டியார், M. A., அவர்கள்,
(12—3—'45ல் திருச்சி வானொலியில் பேசியது.)

'தெண்ணீர் வயல் தொண்டை நன்னாடு சான்றோருடைத்து'

என நம் தமிழ்ப்பாட்டி ஔவையாரால் புகழ்ந்து பாடப் பெற்ற சிறப்பையுடைய தொண்டை நாடு 17-ஆம் நூற்றாண்டிலே இருபத்திநான்கு கோட்டங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. அக் கோட்டங்களுள் களத்தூர்க் கோட்டம் மிகச் சிறப்பு வாய்ந்தது. "பொன்னிட்டாற் பொன்விளையும்" என யாவரும் புகழ்ந்து கூறும் படியான பொன்களத்தூர் பாலாற்றின் கரையிலே திகழ்ந்தது. தற் பொழுது செங்கற்பட்டுக்கருகே 'ஒத்திவாக்கம்' என்னும் ரயிலடிக்கு அயலே உள்ளது. தென் களந்தை, களத்தூர், பொற் களந்தை, பொன்விளைந்த களத்தூர் என அவ்வூர் மருவியும் வழங்கும். ஒரு காலத்திலே அப்பதியின்கண் நெற்கதிர், பொற்கதிராய்த் திகழ்ந்த தென்றும், அது காரணமாகவே பொன்களத்தூர் அல்லது பொன் விளைந்த களத்தூர் என்ற காரணச் சிறப்புப் பெயர்களை அவ்வூர் பெற்றதென்றும் கர்ணபரம்பரைக் கதையுண்டு. இத்தகைய செழுமை மிக்க ஊரிலே களத்தூர் கிழார், குணவீர பண்டிதர், புகழேந்திப் புலவர், அந்தகக்கவி வீரராகவ முதலியார் முதலிய பெருந்தமிழ்ப் புலவர்கள் பலர் தோன்றிச் சிறந்தனர். இத்தகைய செழுமையும், சிறப்புமிக்க ஊரிலே செங்குந்தர் குடி சிறந்து விளங்கிற்று. அக் குடியினுள் இற்றைக்குச் சற்றேறக் குறைய 280 ஆண்டுகட்கு முன்னர்ப் படிக்காசுப் புலவர் என்ற காரணச் சிறப்புப் பெயர் பெற்ற புலவர் சிகாமணி பிறந்தனர். இவருடைய இயற்பெயர் யாதெனத் தெரியவில்லை. இளமையிலே கணக்காயரிடத்துக் கற்க வேண்டியவைகளைக் கற்று வல்லவரானபின் மேன்மேலும் புலமையிற் சிறக்க விரும்பித் தொல்லாணை நல்லாசிரியரைத் தேடினார். அக்காலை பிறக்க முத்திதரும் திருப்பதியாகிய திருவாரூரிலே வைத்தியநாத நாவலர் என்னும் சான்றோர் இலக்கண நூல்களை எழுத்தெண்ணிப் படித்தவரென்றும், அக் கல்விப் பொலிவு தோன்ற இலக்கண விளக் கம்' எனப் பெயரிய சீரிய நூலை இயற்றியுள்ளாரென்றும் கேள்வி யுற்று,

"எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார் காணின் இலையாம்"

என்ற ஓர் புலவர் வாக்கின் உண்மையை ஓர்ந்து, அவர்பாலேகிக் கற்கத் துணிந்து, சிறந்த இலக்கண நூல்களையும், சிவஞானபோதம், சிவஞான சித்தியார் முதலான மெய்கண்ட சாத்திரங்களையும் சந்தேக மறக் கற்றுத் தெளிந்தார். இயற்கையிலே இவருக்குச் சந்தக்கவி பாடவேண்டுமென்னும் வேட்கைமீதூர்ந்தமையாற் சந்தக் கவிகளிலே பெரிதும் பயின்று பாடிப் பழகுவாராயினார். இதனாலேதான் "பண் பாய பகர்சந்தம் படிக்காசு அலாதொருவர் பகரொணாதே" என்று

பிற்காலத்துப் புலவர் ஒருவர் இவருடைய கவிபாடுந் திறமையைப் புகழ்ந்து பாடியுள்ளார். ஆனல் நம்முடைய தவக் குறைவால் இவருடைய சந்தக் கவிகள் நமக்கு ஒன்றுகூடத் தற்பொழுது கிடைக்கவில்லை. சீட்டுக் கவி பாடுவதிலும் இவர் விருப்பம் அதிகமுடையவர்.

இங்ஙனம் கற்று வல்ல கவிஞர் போற்றும் புலமை மிக்க படிக்காசுப்புலவரே, படிக்காசுத் தம்பிரான் என்பவராவார். இதன் காரணத்தைப் பிற்கூறுதும். இவருடைய வாழ்க்கையை நான்கு பகுதிகளாகப் பிரித்துப் பார்ப்போமேயானல்,

இல்லற வாழ்க்கையும் நல்குரவால் ஏற்பட்ட நலிவும்
வள்ளல்களால் போற்றப் பெற்ற வரலாறும்
படிக்காசுப் புலவரும் தம்பிரான் பட்டமும்
தில்லையும் திருவடி சேர்தலும்

என்னும் பகுதிகளே முக்கியமானவைகளாகும்.

புலவர் பெருமான் இல்லறமாகிய நல்லற வாழ்க்கையைத் தம் வாழ்க்கைத் துணையுடன் சிறப்பாக நடாத்தி வருங்காலத்து, இவர்களது ஒன்றுபட்ட வாழ்க்கையின் பயனுக ஒரு ஆண் குழந்தை வாய்த்தது. குழந்தையைக் கண்ணை இமை காப்பதுபோற் காத்து வந்தனர். இவர்களுடைய இனிய வாழ்வு கண்டு பொருமை கொண்டதுபோல் வறுமையென்னும் வன்பிணி இவர்களைப்பற்றிக் கொடுமையாய்த் துன்புறுத்தியது.

"இருவே றுலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு"

என்ற பொய்யா மொழிக்கிலக்காக, இனிய தமிழிற் கேட்போர் செவி இனிக்க, உளமுருகப் பாடும் பான்மை வாய்ந்த நம் பாவலர் மிடித் துன்பத்தினின்றும் மீளும் வகையறியாராய்த் தத்தளித்தனர். இம் மிடித்துன்பத்திற்கு விதி விலக்காகவுள்ள புலவர் யாருமில்லை. இவ்வுலகிலுள்ள புலவர் அனைவரும் நல்குரவால் நலிவுற்றிருக்கின்றனர். ஆங்கிலப் புலவருள் கோல்டு ஸ்மித் (Gold smith) என்பவர் கடன்காரரால் பற்றப்பட்டதும், ஷெரிடன் (Sheriden) என்பவர் கடனில் முழுகி அதனின்றும் மீளவகையறியாராய் வீட்டிற்கு இரவில் வந்து கரந்து வாழ்ந்ததும், சர் வால்டர் ஸ்காட் (Sir Walter Scott) என்பவர் கடனைத் தீர்ப்பதற்காக ஆயுள் முழுதும் எழுது கோலுடன் இருந்ததும் எல்லோரும் அறிவர். கம்பர் நல்குரவால் நலிந்ததனலன்றே தாம் பாடிய இராமாயணத்தில் தக்க இடம் பார்த்துக் கடன்பட்டவர் நெஞ்சக் கலக்கத்தை,

"விடங்கொண்ட மீனைப்போலும், வெந்தழல் மெழுகு போலும்,
படங்கொண்ட பாந்தள்வாயிற் பற்றிய தேரை போலும்,
திடங்கொண்ட ராமபாணஞ் செருக்களத் துற்ற போழ்து
கடங்கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினன் இலங்கை
வேந்தன்."

என்னும் கவியில் சித்திரித்துக் காட்டுகிருர். செந்நாப் போதாரும்,

"நெருப்பினுள் துஞ்சலு மாகும், நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது"

என்று அருளிச் செய்தன ரன்றே.

இவ்வாறு நல்குரவுத் துன்பத்தை எண்ணி எண்ணி உள்ளம் உருகிச் சோர்ந்தார் புலவர். அருமைக் குழவியும் அன்னை மார்பிலே சுவைத்தொறும், சுவைத்தொறும் பால் காணுமையான் அன்னை முகம் நோக்கி அழுவதாயிற்று. அந்தோ! நங்கை யாது செய்வாள் பாவம்! தன் காதற் கொழுநன் முகம் நோக்கி வாடுவாள். "மதலையைப் பெறு நாள் துன்பம், வளர்த்திடு நாளுந் துன்பம்" என்ற ஆன்றோர் வாக்கை யுணர்ந்து புலவரும் திருவளர் செல்வனின் துயர் பொறுமல் வல்ல மாநகர்க் காளத்தி பூபதி என்பவரைக் கண்டு கல்லுமுருகுமாறு தமது துன்பத்தைச் சித்திரத்தில் எழுதிக் காட்டியது போல,

> "பெற்றுள் ஒருபிள்ளை என்மனையாட்டி : அப்பிள்ளைக்குப் பால்
> பற்றுது : கஞ்சி குடிக்குந்தரமல்ல : பால் இரக்கச்
> சிற்றுளு மில்லை : இவ்வெல்லா வருத்தமுந்திர ஒரு
> கற்று தரவல்லையோ? வல்ல மாநகர்க் காளத்தியே!"

என்னும் பாட்டைப்பாடிப் பாற்பசுக்களையும் அவற்றைக் காப்பதற் குரிய பொருளையும் பெற்றுர். பிறகு மாவண்டூர்க் கத்தூரி முதலி யார் அருமைப் புதல்வர் கறுப்பமுதலியார் வேண்டுகோளுக் கிணங்கித் 'தொண்டை மண்டல சதகம்' என்ற அரிய நூலைப் பாடி அரங் கேற்றுவித்து, அவரிடமிருந்து பல பரிசுகளும் பெற்று, அவரே தன் சிவிகையையும் சுமக்கும் பெருமையையும் பெற்றுர். இது குறித்து அக்கறுப்ப முதலியாரைப் பாடுங்காலத்து, கறுப்ப முதலியார் என்று யார் அவரை அழைத்த போதிலும், தான் மாத்திரம் அவரைப் பெய ரளவில் பேர் கறுப்பன் என்றும், அவருடைய சிவப்பு நிறம் செம்மைப் பண்பை யுணர்த்துகிற காரணத்தினுல் அவரை "நிறஞ் சிவப்பன்" என்றும், கீர்த்தியிலே மாசுமறுவற்ற புகழுடையவன் என்பதற்காகக் "கீர்த்தியினுல் வெளுப்பன்" என்றும் கூறுவேன் என்னுங் கருத் தமையக் கறுப்பு, சிவப்பு, வெள்ளை என்னும் நிறங்களை அலங்காரம் படக்கூறிய புலவரின் மதி நுட்பம் போற்றற்குரியதே.

அக்காலத்தில் இராமநாத புரத்தில் தமிழ் நங்கை தன் விருப்பம் போல் நடம் புரிவதைக் கேள்வியுற்று அந்நகரத்தைச் சேர்ந்து புல வர்கள், உரையா முன் உணர்ந்து ஆதரிக்கும் பெற்றியோர் இல்லாத காரணத்தால் புலவர் பெருமக்கள் இலவம் பஞ்சு எவ்விதம் ஒரு பற்றுக்கோடு மில்லாமல் காற்றின் போக்குக்கு வயப்படுகிறதோ, அவ்வாறே வறுமையாகிய காற்றில் பறக்கலாயின ரென்றும், அதுகாலை அப் பஞ்சுபோய்த் தங்கிக் கொள்வதற்கு ஆதரவாக இருக் கின்ற தருப்போலப் புலவர்களுக்குத் தேவேந்திர தருவாய் இரகுநாத சேதுபதி விளங்குகிருரென்றும் ஒரு செய்யுள் மூலம் உணர்த்தினுர். சேதுபதியும் புலவர் பெருமானின் கவிபாடும் நயத்தை மெச்சி அவரைத் தன் சமஸ்தான வித்துவான்களுள் ஒருவராக ஏற்படுத்தி மேன்மைப் படுத்தினுர். ஆனுல் புலவருக்குக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடப்பது முடியாது போனதால் அப்பதவியிலிருந்து நீங்கிப் பல வள்ளல்களை அடுத்துப் பெருமைப்படுத்தப்பட்டார். தண்டலை நீணெறி என்னும் திருப்பதியைச் சார்ந்து அங்கு வாழ்வார் விரும்பி யாங்கு 'தண்டலையார் சதகம்' என்னும் பழமொழி விளக்கத்தைப் பாடினர். காயற்பட்டணம் சீதக்காதி வள்ளல் படிக்காசுப் புல வரின் பெருமை அறிந்து இவரை நன்கு மதித்தார். புலவர் இவருடன்

நட்புக் கிழமையும் கொண்டாரென்றும் கூறலாம். சீதக்காதி வள்ளல் மதத்தால் முகமதியரெனினும் தமிழமுதம் பருகும் செவியுடைய ராய்த் தமிழ்ப் புலவர்களுக்கு வரையாது வழங்கும் வள்ளலாய்த் திகழ்ந்தனர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய் வாழும் சீதக் காதியின் கொடைத் திறத்தைப் புலவர் பலவாருகப் புகழ்ந்து பாடிய போதிலும் அவற்றில் ஒரு பாடல் மிக அழகு வாய்ந்தது. சீதக் காதியின் கொடையைப் புகழ்கின்றார். இடைவிடாமற் கொடுப் பதையும், மிக்க பொருளைக் கொடுக்கின்றாரென்பதையும் எவ்வாறு கூறுகின்றார் பார்ப்போம்.

"காய்ந்து சிவந்தது சூரிய காந்தி; கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்; தொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம்; அநுதினமும்
ஈந்து சிவந்தது மால் சீதக்காதி யிருகரமே."

இதில் இடைவிடாது கொடுக்குந் தன்மையினாலே சீதக்காதியின் இரண்டு கைகளும் சிவக்கின்ற தன்மையை உற்று நோக்கிய இவர் உள்ளம், நூலிற்றோன்றும் நயங்களைத் தமது நுண்ணறிவால் பிறர்க் குக்காட்டி மகிழ்விக்கும் பாவாணரின் நெஞ்சத்தையும், தம் நாயக ருக்கு இன்பத்தை அள்ளிக் கொடுக்கும் பெண்களது கலவிக் காலத் துத் தோன்றும் கண்களையும், உலகிற்கு ஆக்கல், அழித்தல், காத்தல் களைச் செய்து நன்மை விளைக்கும் சூரியனுடைய செங்கிரணத்தையும், சிவக்கின்ற ஒப்புமை கண்டு ஊடுருவிச் செல்கின்ற திறம் உற்று நோக்கத் தக்கது.

பிறகு புலவர் சிவகெங்கைத் திருமலைத் தேவரைக் காணச்சென்ற பொழுது, அத்தேவர்கண்ணுக்குப் புலவர் செருக்குடையவராய்த் தென்பட்டாராம். ஏன்? "காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்" என்ற படியும், "வெல்லம் கசந்திடுதல் வாய்க்குற்றம்" என்ற படியும் இயற்கையிலே செருக்கு மிக்குடைத் திருமலைத்தேவர்,

"உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்"

என்ற ஒள்ளிய அறிவின் தெள்ளியர் கூற்றுக்-கொப்பப் புலவர் பெரு மானைச் சிறையிலடைத்து வைத்தார். அக்காலத்துத் திருமலைத்தேவர்

மனங்குளிர்ந்து, சிறை வீடு செய்யும்படி ஒரு கவி பாடினார். அக் கவியில், தான் தமிழ்ச் சோலையில் தன் விருப்பம்போல் பறந்து சென்று இலக்கண இலக்கியப் பழங்களைத் தின்னும் பச்சைக்கிளி யென்றும், தன்னைச் சிறையில் அடைத்து வைத்து அடிமைப்படுத்தி யதால் அப்பசுங் கிளி, 'இரைதா' வென்று கூப்பிடுகிறதே என்றும் பாடினார். அது வருமாறு,

"நாட்டிற் சிறந்த திருமலையா, துங்க நாகரிகா
காட்டில் வனத்தில் திரிந்துழலாமற் கலைத் தமிழ்தேர்
பாட்டிற் சிறந்த படிக்காசன் என்னும் ஓர் பைங்கிளியைக்
கூட்டில் அடைத்து வைத்தாய் இரைதாவென்று கூப்பிடுதே."

இது கேட்டுப் பாட்டின் கருத்தை வியந்து புலவரைச் சிறை வீடு செய்து வேண்டும் பொருளும் கொடுத்துப் பிழையைப் பொறுத்தருள

வேண்டுமென்றும் இறைஞ்சினர் திருமலைத் தேவர். இவ்வாறு பல வள்ளல்களை நாடிச் சென்றுலும் "இரவினை உள்ளுங்கால் உள்ளம் உருகுமால்" என்பதையும்,

"ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்"

என்னும் பொய்யில் புலவர் கூறியதையும் நினைந்து, இரத்தற் றொழிலை வெறுத்து இறுதியாக மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை முதலியவைகளைப் பறந்து போகும்படியாகச் செய்யும் பசிப்பிணியாகிய பாவியின் கொடுமையினுலே பாவாணர் மிகக் கேவலமானதும், எக்காலத்தும் பொருள் வரக் கூடியதுமான தொழில்களையும், மக்களை நயவஞ்சகமாய் ஏமாற்றிப் பிழைக்கும் தொழில்களையும் கற்றேமில்லையென்றும், தந்நலம் விலை கொடுப்பார் யாவருக்கும் விற்பதல்லது அதற்கு அவர் ஆவார், ஆகாதாரென்றும் வரைவிலாத மகளிராய்ப் பிறந்தோமா? என்றும் மனம் நைந்து பாடிய செய்யுள் கேட்போர் மனதை உருகச் செய்வதோடு, நம் தமிழ்நாடு 17-ஆம் நூற்றுண்டில் எந்நிலையில் புலவர்களை ஆதரித்ததென்பதும் நன்கு விளங்குகின்றது. அக்கவி,

"அடகெடுவாய் பலதொழிலும் இருக்கக் கல்வி
அதிகமென்றே கற்று விட்டோம் அறிவில்லாமல்;
திடமுள மோகனமாடக் கழைக் கூத்தாடச்
செப்பிடு வித்தைகள் ஆடத் தெரிந்தோமில்லை;
தடநிற வேசையராகப் பிறந்தோமில்லை;
சனியான தமிழைவிட்டுத் தையலார் தம்
இடமிருந்து தூது சென்று பிழைத்தோமில்லை;
என்ன சென்மம் எடுத்துலகில் இரக்கின்றேமே,

என்பதாகும்.

இவ்வாறு மனம் நைந்த புலவர், "சாதலும் பிறத்தல் தானும் தம் வினைப் பயத்தினுகும், ஆதலும் அழிவும் எல்லாம் அவைபொருட்கு இயல்பு கண்டாய், நோதலும் பரிவு மெல்லாம் நுண்ணுணர் வின்மையன்றே, பேதை நீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளியென்றுன்" என்னும் சிந்தாமணிச் செய்யுள் நினைவிற்கு வரத் தெளிந்தவராய் ஆண்டவன் பேரருளை நாடி அந்நினைவோடிருந்து இல்லறத்தை விட்டு இறைவனின் அரும்பணியையே இயற்றி வாழ்நாளைச் செலவிட நினைத்தார். அந்நினைவே அவரைத் தருமபுரத்திற்குக் கொண்டு சென்றது. சிவஞானபோதம் என்னும் திப்பிய நூலை அருளிச்செய்த மெய்கண்டதேவர் பரம்பரையிலே வந்த நமச்சிவாயக் குருமூர்த்திகள் திருவாவடுதுறை மடத்தை நிலைநிறுத்தினர். அக்காலந் தொட்டுச் சைவமடங்கள் "சைவமுந் தமிழும் தழைத்தினி தோங்குக" என்ற குறிக்கோளைக் கொண்டவாய் யாண்டும் நிலைநிறுத்தப்படலாயின. யாவரும் தம்மடம் அகல்வதற்கு மடங்களை நாடிச் சென்றனர். இக்காலத்தில் இம்மடங்களின் நிலைமை குறித்துத் தமிழ் மக்கள் வருந்த வேண்டியதுதான். இந்நிலை நீக்க மக்கள் எழுச்சி பெறுவதோடு, திருவருள் துணையும் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றும்.

"கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்னும் பொய்யில் புலவன் பொருளுரைக்கேற்பப் புலவர்பிரான் தருமபுர ஆதீனத்தை அடைந்து, பெரிய பட்டத்தில் எழுந்தருளி யிருந்த ஞானசிரியருக்கு அணுக்கத் தொண்டராயமர்ந்து, அவரால் பிறகு வைத்தீசுவரன் கோவிலுக்குக் கட்டளைத் தம்பிரானாய் நியமிக்கப் பெற்று ஆங்குச் சென்று சிவதருமம் செய்து எல்லோருக்கும் அமுதளித்துச் சிறந்த புகழுடன் "படிக்காசுத் தம்பிரான்" எனப் போற்றுமாறு வதிந்தார். இவ்வாறு சிவதருமங்களை நடாத்திவந்த தம்பிரான் புழுத்துச் செத்தாலும், பழுத்துச் செத்தாலும், புரியைக் கட்டி இழுத்துச் செத்தாலும் சிதம்பரத்தே சென்று இறத்தல் நன்றே என்னும் கருத்தமைந்த இரட்டையர்கள் செய்யுளை நினைந்து தமது ஞானசாரியரிடம் விடைபெற்றுச் சிதம்பரஞ் சென்று திருமடம் ஒன்று வகுத்துக்கொண்டு தில்லைநாதரையும் சிவகாமி அம்மையையும், தரிசித்துத் தம்மையடைந்த நன் மாணவர் பலருக்கும் மெய்ப்பொருளை உபதேசித்தும் சைவசித்தாந்த நூற்பொருள்களைச் செவியறிவுறுத்தியும் வருவர். முன்னொருகால் சிவகாமி அம்மையைக் குறித்து,

"வேல்கொடுத்தாய் திருச்செந்தூரர்க் கம்மியின் மீதுவைக்கக்
கால் கொடுத்தாய் நின்மணவாளனுக்குக் கவுணியற்குப்
பால்கொடுத்தாய் மதவேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத்தாய் அன்னையே எனக்கேதுங் கொடுத்திலையே.'

என்னும் இனிய கவியைப்பாட அடியார்க் கருளும் அம்மை உடனே பஞ்சாட்சரப் படிமீது ஐந்து பொற்காசை ஈந்தருளினர். அது கண்டு புலவர், தேவியின் திருவருளை வியந்து பாராட்டினர். இங்ஙனம் படிக்காசு பெற்ற காரணத்தினல் தான் இவர் படிக்காசுப் புலவர் எனும் காரணச் சிறப்புப் பெயர் பெற்றார். இவருடைய ஆழ்ந்த புலமையையும், பரந்த கல்வியறிவையும், இனிமையாகப் பாடும் சக்தியையும் வியந்தே பிற்காலத்துப் புலவர் ஒருவர்,

"மட்டாருந் தென்களந்தைப் படிக்காசன் உரைத்த தமிழ்
வரைந்த எட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கைம்மணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினுறு
நளினந்தானே" என்று பாடலாயினர்.

இவ்வாறு சிறந்த புகழுடன் தோன்றிக் கல்விக் கடலை ஆர அருந்திக் கற்றதனாலாய பயனாகிய கடவுளை மனமாரப் பாடித் துதித்து, இல்லற வாழ்க்கையை இலம்பாட்டால் இன்னற்பட்டபோதிலும் இனிதுற நடாத்தி இறுதியில் மனம் வாக்கு காயம் அனைத்தும் ஆண்டவனுக் குரிமையாக்கித் தில்லைநாதரின் திருவடி நீழலடைந்தனர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

வரலாற்றுப் பகுதி

திருவாவடுதுறை ஆதீன வித்துவான். சு. பொன்னோதுவார் அவர்களின் வாழ்க்கை வரலாறு.

ஓரன்பர்.

மலர்தலையுலகத்து வடவேங்கடம் தென்குமரி யுள்ளிட்ட தமிழ் நாட்டில் நிலைபெற்ற உயிர்களைப் புரக்கும் முரசு முழங்குகின்ற நாற் படையினையுமுடைய சேர, சோழ, பாண்டியரென்னும் மூவரிலும்,

"இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூரும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்து அறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையர்."

எனக் கூறியதற் கேற்ப நீரையுடைய கடலிடத்துப் பிறந்த சங்கின் மேலாக உலகங் கூறும் வலம்புரிச்சங்கை யொத்த குற்றம் நீங்கிய தலைமையினையும், மறத்தை யொழித்து அறத்தை விரும்பி வளர்த்த செங்கோலினையும், பல வேற்படையினையுமுடைய சோழர் முறை புரிந்ததும்,

"வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற் கேகினும்
தற் பாடிய தளி யுணவிற்
புட்டேம்பப் புயன் மாறி
வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத்தலைய கடற் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்க."

விளங்குகின்ற வெள்ளியாகியமீன் தான் நிற்றற்குரிய வடதிசையில் நில்லாமல் தென்றிசைப் போகினும், துளியை யுண்ணும் விழைவால் தன்னைப்பாடிய வானம்பாடி புலரும்படி மழையைப் பெய்தலைத் தவிர்ந்து மேகம் பொய்த்துப் பஞ்சமேற்படினும், காலந்தோறும் பொய்யாமல் வருகின்ற குடகுமலையிடத்தே தலையினையுடைய கட லிடத்தே செல்கின்ற, குற்றங் கூறுதலில்லாத புகழினை யுடைய காவிரி நீர் பரந்து பொன்கொழிக்கும் சோழநாட்டில் தண்டமிழ்ப் பாவை யாய காவிரியின் தென்பாலமைந்ததும், சைவத்தையும், தமிழையும், போற்றி வளர்த்ததும், மெய்ஞ்ஞானச் செல்வர் திருமடத்தையும், சமயகுரவர்கள் முறையே பாடிய திரவியத் தியாகர் திருக்கோயிலை யும், தன்னகத்தே கொண்டதுமாயுள்ளது திருவாவடுதுறை.

இத்தலத்தில் " அவ நெறியிற் செல்லார் வாழுந் துறைசை "
" தவமேரு வான்றெண்டர் வாழ்திருவாவடுதுறை"
என்று போற்றப்படுவதற் கிணங்க, சைவப்பெரியார் திருமரபில் "சுகந்தாவிலாத் தமிழ் வேதங்களோதும்" என்பதற்கொப்ப, தமிழ் வேதங்களைச் சிறப்புடனோதும் ஓதுவார்கள் திருமரபில் உதித்தவர் நம் பொன்னோதுவார். இவரது பரம்பரை மிகவும் போற்றத்தக்கது.

பொன்னோதுவார் பரம்பரை:

வைத்திலிங்க ஓதுவார்
|
குருசாமி ஓதுவார்
|
சுப்பிரமணிய ஓதுவார்
|
பொன்னோதுவார்

சுப்பிரமணிய ஓதுவார் தமிழ்த் துறைசைத் தியாகரடி வணங்கி, தமிழ் வேதங்களை ஓதிவந்ததோடமையாது, தண்டமிழ் வளர்க்குந் தகைசால் மடத்திலும், ஓதும்புலவராயமர்ந்து ஓதிவந்தார். அக் காலத்து "ஆவடுதுறை யொண்புலவோர் படிக்கத் தகுங் குளகக்கவி போல விப்பைந் தமிழை நீ முடிக்கத் தகும்" என்பதால் ஆதீனப் புலவர்கள் பலரிருந்தனர் என்று தெரிகின்றது. மற்றும் சில புலவர்கள் அங்கு வந்து சில நாட்டங்கி அளவளாவிச் செல்வதும் இயல்பு. இம்முறையில் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலரவர்கள் சில நாளங்கு வந்து தங்கினுர்கள். சுப்பிரமணிய ஓதுவாரும் அவர் மைத்துனர் அப்பு ஓதுவாரும் ஓதுந் திறமையைக் கண்டு வியந்து, இருவரையும் தன்னுடன் யாழ்ப்பாணம் வந்து சின்னுள், தங்க வேண்டுமென்று அழைத்தார். இருவரும் நாவலரவர்கள் விருப்பிற் கிணங்கி அவருடன் யாழ்ப்பாணஞ் சென்று அங்கு வதிந்த பல மாண வர்களுக்குத் தேவாரப் பண்களையும், சாரந்தாவென்னும் இசைக் கருவியையும் இசைத்துக் காட்டி அன்பிற் குரியர்களாய் ஐந்தாண்டு வதிந்து, பின்னர் தம் பதியை யடைந்தார்கள்.

சுப்பிரமணிய ஓதுவார் அவநெறியிற் செல்லாத் தவமேருவாந் தொண்டர். தியாகரடி வணங்கி அன்பிற்குரிய மக்களை அடைந்தார். அவர்களில் கலியுகம் 4966 மாண்டு, குரோதன ஆண்டு ஆவணித் திங்கள் 2ம் நாள் (16—8—1865) புதவாரம் மக நக்ஷத்திரத்தில் உதித்தவர் நம்பொன்னோதுவார்.

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்ற வேதமொழிக் கிணங்க இவர் தந்தையார் இவருக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து அருமையாய் வளர்த்து ஐந்தா மாண்டில் பள்ளியிற் சேர்த்துப் பயிற்றுவித்தார்.

இவர் தமது இளம் பருவத்திலேயே "மகன் தந்தைக் காற்று முதவி" என்ற வேதவாக்கிற் கொப்ப கற்றலில்வல்லராயும், சைவப் பற்றுடையவராயும், சிவனடி மறவாச் சிந்தையினராயு மிருந்தார். அக்காலத்து சைவத்திருமடத்தில் தலைமை வகித்த திருத் தலைவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரவர்கள். மடத்தலைவராய இவர் ஓதுவாரவர்களின் அறிவுத் திறனையும், அறவொழுக்கத்தையுங் கண்டு அவர்பால் அன்புமூப்புடையராஞர். இவர் பள்ளியிற் பயிலும் போழ்தே தன் தந்தையின் போதனையால் சிற்சில தேவாரப் பதிகங் களைப் பண்ணுெடு பாடும் பண்புடையராய் விளங்கினுர். இவரது

பதினான்காமாண்டில் அன்பு மிக்குடைத் தலைவரவர்கள் அன்புடனழைத்து அருந்தமிழ் நூல்களைப் பயிற்றுவிக்கத் தொடங்கினர். தலைவரவர்களிடத்தில் இலக்கணச் சுருக்கமும், சிற்றிலக்கியங்களும், பிரபுலிங்க லீலை, காளத்திபுராணம், பெரியபுராணம், காஞ்சிப்புராணம், திருவானைக்காப் புராணம், குடந்தைப் புராணம், மயூரகிரிப் புராணம் முதலிய நூல்களையும் பயின்றார்.

பின்னர் மடத்து வித்துவான்கள் திருவண்ணாமலைப் பண்டார சந்நிதியாகிய ஆறுமுகசுவாமிகளிடத்திலும், மதுரகுட்டி மகாலிங்க சுவாமிகளிடத்திலும், மதுரை இராமசாமிபிள்ளை யவர்களிடத்திலும், யாழ்ப்பாணம் தர்க்ககுடார தாலுதாரி யவர்களிடத்திலும், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரவர்கள் மருமகன் பொன்னையாப் பிள்ளை யவர்களிடத்திலும், யாழ்ப்பாணம் சபாபதி நாவலரவர்களிடத்திலும், மகா மகோபாத்யாய, உ. வே. சாமிநாதய்யரவர்களிடத்திலும், பயின்றுள்ளார். ஆயினும் அவர் இன்னாரிடத்து இன்னநூலைப் பயின்றுள்ளார் என்பது நன்கு புலப்படவில்லை. ஆகையால் தெரிந்தவற்றை இதில் குறிப்பிடுகின்றேன்.

ஆறுமுகசுவாமிகளிடத்தில், நன்னூல் விருத்தி, தொல்காப்பியம், கந்தபுராணம், தணிகைப்புராணம் முதலிய நூல்களையும் பாடங் கேட்டார். யாழ்ப்பாணஞ் சென்று பொன்னையாப் பிள்ளையவர்களிடம் இராமாயணத்தைப் பாடங் கேட்டார். அச்சமயம் பிள்ளை யவர்களுடனும், பசுபதி செட்டியாரவர்களுடனும், மயில்வாகனம் பிள்ளையவர்களுடனும், வல்ல வேட்டுத்துறை மீனுயுத்தம்பி யவர்களுடனும், சின்னத்தம்பிப் புலவரவர்களுடனும், சேர்ந்து ரகுவம்சம் இராமாயணம் இரண்டையுமாராய்ந்தார்கள். இராமாயணத்தைப் பாடங் கேட்டும் ஆராய்ந்தும் சுமார் பதினெண்டிங்களங்குத் தங்கிப் பின்னர், தன் பதியடைந்தார்.

இப்பெரியார் பாடங்கேட்ட காலங்களில் ஆதிமுதலந்தம் வரையும் சேர்ந்து பாடங்கேட்காவிடினும் சிற்சில நூல்கள் சேர்ந்து பயின்ற முறையில் உடன்பயின்றார் சிலருள்ர். அவர்களில் நீலலோசனி பத்திராதிபர் சதாசிவம் பிள்ளை, சூரியனார்கோயில் முத்துக்குமார தேசிகர், வித்துவான் குழந்தைவேல் தம்பிரான், திரு.வைகுண்டம் நல்ல குற்றாலக் கவிராயர், திருநெல்வேலி செண்பகக் கவிராயர், மகாலிங்க ஐயர், சுப்பிரமணியத் தம்பிரான், சேதுசமத்தானம் முருகையாதேவர், முத்துப்பேட்டை தக்கணாமூர்த்தி பிள்ளை, கோயம்புத்தூர் வெங்கிடாசல முதலியார், மாயூரம் குஞ்சிதபாதம் பிள்ளை, உடையூர் வெங்கட்டராம பிள்ளை, ஷை மடத்து பெரியபூஜை சுப்பிரமணிய தம்பிரான், கார்வார் பரமசிவத் தம்பிரான் முதலியவர்களாவர்.

இவர் முதன்முதல் காழியம்பதி சபாநாயக முதலியார் உயர்தரப் பள்ளியில் தமிழாசிரியர் பதவியெய்தி, பதினேழாண்டு வதிந்தார். அக்காலத்தில் பண்டார சாத்திரம் பதினான்கையும் ஆய்ந்து பிழை திருத்தங்கள் செய்து அச்சிலேறுந் தகுதியுடையனவாக்கி, காழி சீனுவாச முதலியாரவர்களிடமீந்தார். முதலியாரவர்கள் அதை அச்சிட்டார். அதன் முகவுரையில் முதலியார் குறிப்பிட்டதாவது, " இதை

ஆராய்ந்து அச்சிடுதற்குத் திருவாவடுதுறையாதீனம் பொன்னோதுவார் செய்த நன்றி யான் எப்பொழுதும் மறக்கற் பாலதன்று" என்பதாகும்.

பின்னர், காரைக்குடியில் அமைந்துள்ள செட்டியார் உயர்தரப் பள்ளியில் சுமார் 6-ஆண்டு தமிழாசிரியராயிருந்தார். அதன் பின்பு ஆவடுதண்டுறை மடத்து வித்துவானுயமர்ந்ததோடமையாது, அங்குச் சரஸ்வதிமால் என்ற பெயருடன் ஓர் புத்தக நிலையமேற்படுத்தி ஆண்டைய சில்லோருக்குப் பதினெண்டிங்கள் பாடம் போதித்து வந்தார்.

கும்பகோணம் கல்லூரியில் 6-திங்கள் ஆசிரியராயமர்ந்திருந்தார். பின்பு, எல்லையில்லாத் தில்லையம்பதியை யடைந்து தண்டமிழ் வளர்க்கும் தமிழ்த் தலைவராகக் கல்லூரியில் மிளிர்ந்தார். கல்லூரி பல்கலைக் பல்கலைக் கழகத்துடன், சேர்ந்த பின்னர் அப்பல்கலைக் கழகத்தில் தமிழாசிரியராய் வதிந்து 1934-ம் ஆண்டு ஜுன் மாதத்துடன் தம் பதவியினின்றும் விலகி ஆவடுதண்டுறை யடைந்தார்.

இவரிடம் பள்ளியிற் பயின்ற மாணவர் பலரன்றி, தனியே பயின்ற சிலரும் உளர். ஆவடுதண்டுறை மடத்துப் பெரிய மணியம் பொன்னுபிள்ளை, மணலூர் இராமாநுஜவையங்கார், ஆவடுதண்டுறை சோமு ஓதுவார், கல்யாணசுந்தரம், மீனாட்சிசுந்திரத் தம்பிரான், பொன்னுவையர், புள்ளிருக்கு வேளூர் சோமசுந்திர தேசிகர், குற்ருலம் சிங்காரவேலு பிள்ளை முதலியவர்களாவார்கள்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தினின்றும் அகன்ற பின்னர் திருப்பனந்தாள் ஆதினத் தலைவர் சொக்கலிங்க சுவாமிகளுக்குத் தணிகைப் புராணம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், ஆகிய இரண்டு நூல்களையும் போதித்தார். சுமார் ஏழு எட்டு மாதங்களங்குத் தங்கி உடல்நலக் குறைவால் தம்பதி யெய்தி, சின்னட்டங்கி யுவ வாண்டு ஆடித்திங்கள் 12 ஆம் நாள் மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தி இறைவன் இணையடி நீழலிற் றங்குவாராயினர்.

இவரியற்றிய நூல்கள்.

சிவஞான போதத்தின் வழி நூலாகச் சிவஞானபோத சிந்தனை என்னும் ஓர் சிறு நூல் இயற்றியுள்ளார். திருப்பனந்தாள் மடத் தலைவர் சுவாமிநாத தம்பிரான் தொல்காப்பியம் செய்யுளியலில் மயக்கம் எல்லோருக்கும் அதிகமாக இருக்கிறது அதைத் தெளிவுறும் வகையில் விரித்தெழுதவேண்டுமென்று சொல்லச் செய்யுளியலுக்கு ஓர் கொடிவழி வரைந்து தெளிவாக எழுதி வைத்துள்ளார். ஏட்டிலிருந்த துறைசைப் புராணத்தைப் பிழை திருத்தி எழுதியுள்ளார். தணிகைப் புராணத்திற்கும் இராமாயணத்திற்கும் குறிப்புரை எழுதி வைத்துள்ளார். ஆவடுதண்டுறை மடத்துச் சம்பந்தமான நூல்களைப் பயின்று ஆதின சம்பிரதாயங்களையும் பரம்பரையையும் தொகுத்து ஒரு நூல் எழுதிவைத்துள்ளார். இவற்றுள் ஒன்றும் இன்னும் அச்சிடப்படவில்லை.

தமிழ் வேந்தர்.

வித்துவான். ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள்.

(முற்றொடர்ச்சி: துணர் 21, மலர் 3, பக்கம் 72)

இதனால், "வண்புகழ் மூவர்" என ஆசிரியர் தொல்காப்பியனார் புகழும் சேர சோழ பாண்டியர் மூவரும் பண்டைத் தமிழ்ச் சான்றோர்களால் பாடிப் பாராட்டப்பெற்ற பெருஞ் சிறப்புடையா ரென்பது இனிது விளங்கும்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த இத்தமிழ் மன்னர் தம் இருப்பும் சீர்மையும், பண்டைநாளிலே, ஏனை நாடுகளிலும் பரவியிருந்தன வென்பது இப்போது வெளிவந்துள்ள ஆராய்ச்சிகளால் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கட்கும் சுமேரிய மக்கட்கும் நெருங்கிய இயைபு காணப்படுகிறது என்றும், மிக்க அண்மையில் கண்ட மோஹெஞ்சதாரோ அரப்பா முதலிய விடத்துக் கண்டெடுப்புக்களால், அவ்வியைபு வலுப்பெறுகிறதென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். பாபிலோனியா, எகிப்து முதலிய நாடுகளுடன் நம் தென்னாடு வாணிக முறையில் தொடர்பு பெற்றிருந்தது. தென்னாட்டுத் தமிழ் மக்கள் கடல் கடந்து சென்று வாணிபம் செய்யுந் துறையில் சிறப்பெய்தியிருந்தது ஏனைநாட்டு நூல்களாலும், தமிழ் நூல்களாலும் நாம் அறியக்கிடக்கின்றது. காலினும் கலத்தினும் பண்டங் கொணர்ந்து வாணிகம் செய்யும் வழக்குப்பண்டே தமிழரிடம் சிறப்ப இருந்தது. "நீரின் வந்த நிமிர் பரிப்புரவி" (185) என்பது பட்டினப்பாலை. கலத்திற் சென்று வாணிகஞ் செய்யுந் துறையினை "முந்நீர் வழக்கம்" "கலத்திற் சேறல்" என்று பண்டைத் தமிழ்ச் சான்றோர் வழங்கியிருக்கின்றனர். இக்கடல் வாணிகத் தொடர்பேயன்றி, அக்கேடியா, ஈப்ரு, அரபி முதலிய மொழிகளிற் காணப்படும் ஆரியம் தமிழ் என்ற மொழிச் சொற்களும் போதிய சான்று பகருகின்றன.

கடல் வழியாக ஏனை நாடுகட்குச் சென்று அவருடன் பயின்று சிறந்த தமிழர் நாகரிகம் வடநாட்டு ஆரிய மக்கட்கும் பண்டுதொட்டே தெரிந்திருந்தது என்றதற்கு வேண்டிய ஆதரவுகள் கிடைக்காமலில்லை. வி. ஏ. ஸ்மித் முதலியோர்கள் வடவாரியர்கட்கு ஆதியில் தமிழர் வாழ்வு, நாகரிகம் முதலியன தெரிதற்கு இடமில்லை, இரு நாட்டவரும் ஒருவரை யொருவர் அறிந்து கோடற்குரிய வாயில்கள் அப்போது கிடைக்கவில்லை, ஆரியர் புழக்கமே விந்திய வரையின் வடபகுதியோடே நின்றது என்பர். P. T. சீனிவாசய்யங்கார் முதலியோர், அதனை மறுத்து ஆரிய நூல்களுள் மிகத்தொன்மை வாய்ந்த ரிக் வேதத்திலேயே தென் தமிழர் கூட்டுறவு காட்டும் தமிழ் நாட்டுப் பொருள்கள் கூறப்பட்டிருத்தலின், தமிழர் வாழ்வு பண்டே ஆரியர் அறிய விருந்தது என்று வற்புறுத்துகின்றனர். ரிக்வேதத்தில் "சரத் பாத நா தக்ஷுணு" என்ற தொடரில் வரும். "தக்ஷுணு" என்ற மொழிக்கு, சாயணாசாரியார், ஐத்திரேய பிரமாணத்துட் கண்ட கதை யொன்றைத்துணையாகக்கொண்டு கூறிய பொருள் பொருந்தாது; "தென்னாடு" என்று மேக்டனல் (Macdonell) கீத் (Keith) என்போர்

கூறியதே மிக்க பொருத்தமுடைய தென்பது தக்க சான்று காட்டி வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

வேதங்கள் நான்கினும் மிக்க பழமை வாய்ந்த ரிக் வேதத்திலும், ஏனை வேதங்களிலும் காணப்படும் முத்து, பொன் முதலிய விலையுயர்ந்த மணிகள் யாவும் தென்னாட்டவையாதலின், ஆரியவர்த்தத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இயைபுபண்டேயிருந்தது என்பது அறியப்படும். கி. மு. நான்காம் நூற்றாண்டில் பிறந்த கௌடில்யர் எழுதிய பொருணூலும் இவ்வணிகமுறையை விதந்து கூறுகிறது. புத்த ஜாதகக் கதைகளும் இவ்வுண்மையை வற்புறுத்துகின்றன.

பல கூறுவானேன்? இருக்கு வேதத்துத் தைத்திரிய ஆரணியகத்தில் வரும், "ஆரிய வரம்பு கடந்த மூவர், வாயசர், வங்கவாகதர், சேரபாதர் என்போராவர். (ரிக் VII. 101. 14) இதற்குப் பொருள் உரைத்த சாயனர், ஆனந்த தீர்த்தர் முதலியோரின் வேறுபட்டு, "வங்கவாகதர் என்பவர் வங்கரும், மகதரும்," எனவும், "சேரபாதர் என்போர் சேரர்" என்வும் கீத் என்பவர் கூறுகின்றனர். இதனையே ஆராய்ச்சியாளர் உண்மையெனக் கொள்கின்றனர்.

வடமொழியில் உள்ள வால்மீகி ராமாயணம், தென்தமிழ் நாட்டுப் பாண்டிநாட்டையும் சோழசேரர் நாடுகளையும் கூறுகின்றது; அதனால் வால்மீகி காலத்தே, வடவர்க்குத் தமிழ்நாட்டு மூவேந்தர் இருப்பும் தெரிந்தது என்பாரும் உண்டு. ஆயினும் இப்போதைய ஆராய்ச்சியாளர்கள் இக்கூற்றுக்களை நன்றாக ஆராய்ந்து, அவை கொள்ளத் தக்கவல்ல என்று துணிந்து விட்டனர். சங்கமிருந்தது கவாடபுரம் என வடமொழி இராமாயணம் கூறும் கூற்றும் ஆராய்ச்சிக்கு உடைந்து போயிற்று. வடவரது ரிக்வேதத்தில் மகவான்களுள் ஒருவனாக இராமன் என்ற ஒருவன் காணப்படுகிறான். அவன் மனிதனாகக் கூறப்படுகின்றானேயன்றி, இராமாயணம் கூறுவதுபோல அவதார புருடனாகக் கூறப்படவில்லை. அன்றியும் அவதாரம் பற்றிய கருத்து ஆகம காலத்திற் பிறந்த ஒன்றே தவிர, அதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர்த்தாகிய வேதக்காலக் கருத்தன்று. ஆகமும் வேதமும் மாறுபட்ட கருத்துடையனவாகும்; இன்றேல், கி. பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்த யாமுனாசாரியன் ஆகமப்பிரமாணியம் என்ற நூலையெழுதநேர்ந்திராது. ஆகவே, இராமனை அவதார புருடனாக்கி இதிகாச நாயகனாகக்கூறும் செய்தி ஆகமகாலத்தில் தான் பிறந்திருகக வேண்டும், பாரதப்போரின் முடிவோடு வேதகாலம் முடிந்தமையின், அதற்குப்பின்பே, ஆகமகாலம் பிறப்பதாயிற்று. அது கி. மு. பத்தாம் நூற்றாண்டாகலாம் என்று தமிழர் வரலாறுடையார் கூறுகின்றார்.

வால்மீகி வாழ்ந்தகாலம் வேதகாலம். இராமன் காலமும் அதுவே; ஆகவே, அவன் வாழ்நாளிலேயே அவனைப் பாடிய புலவர், அக்காலத்தில் இல்லாத (பலநூற்றாண்டுகட்குப் பின்னர் வந்த காலக்) கருத்தைப் புகுத்தித் தெய்வத்தன்மையை ஏற்றிப் பாடினாரென்றால் உண்மையறிவுக்கு இயையவில்லை. மேலும் வேதகாலத்து வடமொழிச் செய்யுணடை வேத நெறியாகிய சந்தை நடையென்றும், பிற்காலத்து இலக்கியநடை பாசநடை யென்றும் கூறுவர். வேதகாலத்து இராமனை அவன் காலத்துப் புலவர் பாடுமிடத்து, அக்கால நடையாகிய சந்தை

நடையாற் பாடுவரேயன்றி, பின் வந்த பாணினியார் இலக்கணம் வகுத்துரைத்த பாசநடையிற் பாடுவாரல்லர். இப்போது கிடைக்கும் வால்மீகி இராமாயணம் பாசநடையிற் பாடப்பெற்றிருத்தலின் இஃது அவற்குப் பிற்போந்த வால்மீகி என்ற பெயருடையார் ஒருவரால் செய்யப்பெற்றதாகும் என்பர் P. T. சீனிவாசையங்காரவர்கள். இப்போது வால்மீகி இராமாயணத்துட் காணப்படும் தமிழ்நாட்டுச்செய்தி முற்றும் பின் வந்த வால்மீகி காலத்தனவாம் என்று கொள்வதே தக்கதாம். இந்த வால்மீகி பாணினியார் காலத்தவர் என்றும், பாணினியார் கி. மு. ஏழாம் நூற்றுண்டினர் எனினும் கூறுபவாதலின், இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரத்தெழு நூறியாண்டுகட்கு முன்பே தமிழ்நாட்டு மூவேந்தரின் சிறப்பு வடவர் நாட்டில் அறியப்பெற்றிருந்த தென்பது துணிவாகிறது.

அன்றியும் இராமாயணத்துக் கூறப்படும் அரக்கரும், வானரரும் தென்னுட்டு மக்களையே குறிக்கும் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. அக்காலத்தே தென்னுட்டவர் வடக்கே கோதாவிரிநதிக்கரை வரையிற் பரவியிருந்தனர். (அந்நதிக்கரைப் பகுதியைச் சகஸ்தானம் என்பர். அவர்தம் தலைவனுன இராவணன் வீழ்ந்த பின்னரே, தமிழ்நாட்டில் இம்மூவேந்தரும் தோன்றியிருத்தல் வேண்டுமெனவும், இவர் சிறப்பெய்திய பின், இராமாயணத்துள் குறிக்கப் பெற்றகாலம் கி. மு. முதலாயிரம் யாண்டுகட்குள்ளேயாம் எனவும் தமிழர் வரலாறு என்னும் நூல் கூறுகின்றது. மேலும், சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்று தமிழ்க்குடிகளும், "படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு" வரும்குடி எனப் பரிமேலழகர் கூறியதற்குப் பொருள் கூறு முகத்தால், "எழுவாய் காணமுடியாத அத்துணைத்தொன்மை வாய்ந்த குடி" யென்று அந்நூல் கூறுகின்றது.

இனி, "வால்மீகியின் சமகாலத்தவர்" எனப்படும் பாணினியார் தாம் வகுத்த வடமொழியிலக்கணத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களைக் குறித்திலர். இது குறித்து நல்ல சொற்போர் ஒன்று தொடுக்கப்பெறுகிறது. D. R. பந்தர்க்கார் என்பவர், பாணினியார் காலத்தில் வடஆரியர்க்குத் தமிழ்நாட்டவரைப்பற்றியாதல், அந்நாட்டு அரசுகளைப்பற்றியாதல் ஒன்றும் தெரியாது என்று கூறி அதற்குச் சான்றுகப் பின் வருமாறு கூறுகின்றுர். "பாணினியார் எழுதிய அஷ்டத்யாயி என்பதனைப் படித்தவர் எவரும் அவரைத் திருந்திய அறிவில்லாத நூலாசிரியர் என்று கூறமாட்டார். அவர் எழுதிய நூலுள் பாண்டிய சோழ கேரளர் என்ற இவரைக் குறித்திலர். இவர் தம் பெயரமைதிக்குரிய இலக்கணமும் குறித்திலர். இம்மூவேந்தரின் பெயரைக்கேட்ட அறிஞன் எவனும், தான் எழுதும் நூலில் அதனைக் குறியா தொழியான். இதிலிருந்து நாம் அறியக்கிடப்பது யாதெனில், இம் மூவேந்தர்களின் பெயர்தானும் பாணினியார்க்குத் தெரிந்ததில்லை என்பதாம்; ஆகவே, அவர் காலத்தில் கி. மு. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஆரியர்க்குத் தமிழ்நாடு தெரியாது என்றவாறும்".

இதனை ஆராய்ந்து காணவந்த P. T. சீனிவாசையங்கார், "பாணினியார் தமிழ் மூவேந்தரைத் தெரிந்திருந்தார்; ஆனல், அவர்தம் பெயர் தமிழ்ப் பெயராதலின், அவற்றிற்கு அமைதியினைத் தம் வட

மொழி யிலக்கணத்தே காட்டாராயினர். அவரெழுதிய அஷ்டத்யாயியைக் குறைவற வரைந்த இந்திய நிலவரை நூல் (Geography) என்று கொள்வது தகுதியன்று; மேலும் அவர் இம்மூவரையும் தெரிந்திலர் என்பதும், அதுகொண்டு ஆரியர் தமிழ்நாட்டையும் அதன் இருப்பையும் அறியார் என்பதும் வீண்வாதமாகும்.'' என்று கூறி, "ஆபத்தம்பர், போதாயனர் என்ற இருவருள் ஒருவர் அவர் காலத்தவர்; அவர் தம் நூலில் தென்னாட்டு ஆரியர்க்கென வகுத்த ஒழுக்க முறைகளுள் தென்னாட்டவர் ஒழுக்கமும் தழுவிக் கூறியிருக்கின்றனர். அதனால், அக்காலத்து ஆரியர்க்குத் தென்தமிழ்நாடு தெரிந்தேயிருந்தது என்றே கொள்ளவேண்டும்; பாணினியார் குறைவற நிரம்பியவர் என்பது கருத்தாயின். அவர் எழுதிய, "வியாகரண" த்துக்குக் காத்தியாயனரும் பதஞ்சலியாரும் வார்த்திகமும் மகாபாடியமும் வகுக்க வேண்டியதில்லையாம்'' என்று விடையிறுக்கின்றார்.

இது கிடக்க, இனி, பாரதகாலத்தில் ஆரியர்க்கும் தமிழர்க்கும் அரசியல் தொடர்பு உண்டாகியிருக்கிறது. திரௌபதிக்குச் சுயம்வரம் நடந்தகாலத்தில், வந்திருந்த வேந்தர்களுள் பாண்டிவேந்தன் ஒருவன். கிருஷ்ணன்பால் பாண்டிமன்னனொருவன் தோல்வியுற்றான்; அப்போது பாண்டியர் காவல் கட்டழிந்தது. சோழவேந்தன் ஒருவனோடு கிருஷ்ணன் போருடற்றியிருக்கின்றான். யுதிஷ்டிரன் இராயசூயம் வேட்டபோது, அவன் இளையவனான சாதேவன் தென்னாடு புகுந்து திராவிட, சோழ, கேரள, பாண்டியர்களை வென்றிருக்கின்றான். சோழரும், திராவிடரும், ஆந்திரரும் இராயசூயத்திற்கு வந்திருந்தனர். சோழரும் பாண்டியரும் யுதிஷ்டிரனுக்குப் பல பரிசில் வழங்கியிருக்கின்றனர். பாரதப்போர் தொடங்கிய காலத்தில் பாண்டியரும், சோழரும், சேரரும் பாண்டவர்க்குத் துணையாகப் போருடற்றினர். துரோணனுடன் போர் செய்யச் சென்ற பாண்டிய மன்னன் அசுவத்தாமனால் கொல்லப்பட்டான். அருச்சுனன் "தீர்த்தயாத்திரை" செய்தபோது பாண்டிநாட்டில் மணிபுரம் (மணலூர்) என்னுமிடத்திருந்த சித்திரவாகனின் மகள் சித்திராங்கதையை மணந்தான்.

இப்பாரதத்துள் காணப்படும் "தீர்த்த" வகைகளுள் தமிழ்நாட்டின் தென்கோடி முனையாகிய குமரிதீர்த்தம் கூறப்படுகிறது. இஃதொரு "புண்ணியதீர்த்த மென்பது ஆரியர் கொள்கையே தவிரத் தென்னாட்டவர் கொள்கையாகத் தெரியவில்லை. அது பற்றிய புராண வரலாறுகளும் இவ்விதிகாச காலத்திற்றான் தோன்றியிருத்தல் வேண்டும் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவ்வாற்றால் இராமாயண பாரதகாலத்தே ஆரியர்க்கும் தமிழர்க்கும் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளும் இயைபு இருந்திருக்கிற தென்பது கூறியவாறும்.

இனி, இவ்விதிகாச காலத்துக்குப் பின் தமிழ்நாட்டிற்கும் கீழ்நாட்டுச்சீனாவிற்கும் மேலைநாட்டு எகிப்திற்கும் வணிகத் தொடர்பு இடையறவின்றிச் சிறந்து வந்தது. வருகையில் பாணினி வியாகரணத்துட் காணப்படாத சேர சோழ பாண்டியர் என்ற தமிழ் சொற்களுக்குப் பின் வந்த வடநூலார் சிலர் வடநூன் மரபுகொண்டு இலக்கணவமைதி காணத்தொடங்கினர். (தொடரும்)

சேக்கிழாரும் கம்பரும்.

பாலூர், வித்துவான். து. கண்ணப்ப முதலியார்,
திருவல்லிக்கேணி, சென்னை.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் சேக்கிழார் சுவாமிகளால் அனபாயச் சோழர் காலத்திலே பாடப் பட்டது என்பதற்கு, அவரது திருவாக்கே நமக்குச் சான்று பகர்கிறது. ஆசிரியர் பாயிரத்துள் "திருப்பேர் அம்பலம் செய்ய தூய பொன் அணி சோழன் நீடூழி பார் ஆயசீர் அனபாயன் அரசவை" எனக்கூறி யருளியதனாலும் அறியலாம். இந்த அனபாயர் என்பவர் இரண்டாம் குலோத்துங்கர் என்பது பல கல்வெட்டுக்களால் அறியக்கிடக்கிறது. இந்த இரண்டாம் குலோத்துங்கன் காலம் 1123—1148 எனத் தெரிய வருகிறது. ஆதலின் சேக்கிழாரது காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டெனத் தெளிவாகிறது.

இனிக் கம்பரது காலத்தையும் சிறிது குறிப்பிடுவோம். கம்பர் சோழனிடம் இருந்து பகைமைகொண்டு ஆந்தர தேசத்தில் ஓரங்கல் நாட்டின் அரசனாகிய பிரதாபருத்திரனை அடைந்து அங்கு, சிலகாலம் வாழ்ந்து வந்தனர் என்பது தமிழ் நாவலர் சரித்திரத்திலிருந்து நாம் அறிகிறோம். அவ்வரசனது காலம் கி. பி. 1162—1197 ஆகும் எனக் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இக்காலம் கம்பர் இராமாயணம் அரங்கேற்றிய காலத்தைக் கூறும் தனியன் பாட்டோடு ஒத்தும் இருக்கிறது. அப்பாடல்,

> எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல் சடையன் வாழ்வு
> நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்ப நாடன்
> பண்ணிய இராம காதை பங்குனி அத்த நாளில்
> கண்ணிய அரங்கர் முன்னே கவியரங் கேற்றினானே.

என்பது. அஃதாவது சகாப்தம் 1107 என்பது கி. பி. 1185 ஆகும். ஆதலின் கம்பரது காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதி எனப்போதரும். ஆகவே கம்பர் சேக்கிழாருக்கு ஏறக்குறைய 37 வருடம் பிற்பட்டவர் என்பது போதரும்.

இதுகாறும் கூறிய காரணங்களால் சேக்கிழார் காலத்தால் முந்தியவர் என்பதும் கம்பர் பிந்தியவர் என்பதும் புலனாகின்றன. "கல்வியிற் பெரியர் கம்பர்," "கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்" "தமிழ்க்கம்பநாடன்" என்பனபோன்ற கம்பரைப்பற்றிய புகழ் உரைகள் அவருக்குப் புனைந்துரையாகாமல் மெய்யுரையே ஆகும். அத்துணைப் புகழ் உரைக்குக் காரணம் அவரது புலமையும் நூலறிவுமேயாகும். கம்பர் காளியம்மையின் வரத்தால் இத்துணை அறிவும் பெற்றுக் கவிபாட வல்லவராயினர் என்பது புனைந் துரை ஆகுமே அன்றி மெய்யுரை ஆகாது. அவரது இராமாயணமாகிய பெருநூலை ஒருமுறையேனும் ஓதியவர் அக் கொள்கையை ஒதுக்கி வைப்பர் என்பதில் எள், துணையும் ஐயமின்று. அவரது நூலினின் றும் அவரது பன்னூற் புலமை பளிங்குபோல் காணக்கிடக்கிறது.

கம்பரே தமது நூல் இத்துணை இனிப்பதற்குக் காரணம் என்ன என்று வினவியதற்குத் தாம் அது அதில் ஓர் அகப்பை அள்ளிக் கொண்டதாகக் கூறினர் என்னும் செய்தியும இதனை வலியுறுத்தும். 'அது அதில் ஓர் அகப்பை அள்ளிக்கொண்டேன்' என்பதன் பொருள் தமக்கு முன்னே இருந்த அந்தந்த நூலில் உள்ள பற்பல சொல்லையும் பொருளையும் தம் நூலில் தக்க இடங்களில் அமைத்துக்கொண்டனர் என்பதாம். இவ்வாறு கம்பர் பற்பல நூற்களின் சொல்லையும் பொருளையும் எடுத்துக் கொண்டுள்ளார் என்பதைக் காலஞ்சென்ற சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்த உயர் திருவாளர் செல்வகேசவராய முதலியார் M. A., அவர்கள் தாம் எழுதிய கம்பர் என்னும் நூலில் விரிவாக எடுத்துக் காட்டி யுள்ளார்கள். அதன் விரிவை ஆண்டுக் காண்க.

உயர்திரு முதலியார் அவர்கள் கம்பருக்கு ஓதற்குரிய நூல்களாக இருந்தவை இன்னின்ன எனக் கூறியவற்றில் சைவத்திருமுறைகளையும் குறிப்பிட்டுள்ளார். சைவத்திருமுறை என்பன திருஞா[illegible] சம்பந்தரது திருமுறை முதல் மூன்று, திருநாவுக்கரசரது திருமுறை நான்குமுதல் ஆறு, சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருமுறை ஏழாவது, மாணிக்க வாசகனரது எட்டாந் திருமுறை, சேந்தனர் முதலியோர் பாடியவை ஒன்பதாம் திருமுறை, திருமூலநாயனருடையது பத்தாந் திருமுறை, காரைக்காலம்மையார்முதல் நம்பியாண்டார் நம்பிகள் ஈருகவுள்ளவர் பாடியவை பதினோராந் திருமுறை, தெய்வப் புலவராம் சேக்கிழார் பாடிய பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை எனப் பன்னிரண்டாகும்.

உயர்திரு முதலியார் அவர்கள் ஏனைய நூற்களில் கம்பர் ஈடுபட்டுள்ளார் என்பதைப் பற்பல எடுத்துக்காட்டுகளால் தமது நூலில் எடுத்துக்காட்டினரேனும் திருமுறைகளினின்று ஓர் எடுத்துக்காட்டேனும் எடுத்துக்காட்டிலர். உயர்திரு முதலியார் திருமுறைகளும் கம்பருக்கு ஓதுதற்குரிய நூற்களாகத் திகழ்ந்தன என்று வாளா கூறிச்சென்ற அத்தொடர்க்கு அது அத்துணையும் உண்மை என்று காட்டுதற்கே இக்கட்டுரை எழுந்ததாகும். எனினும், எல்லாத் திருமுறைகளினின்றும் கம்பர் ஈடுபட்டிருந்ததை எடுத்துக்காட்டாமல் அவர் எத்துணை, பெரியபுராணம் என்னும் நூலிலிருந்து எடுத்துக் கையாண்டுள்ளார் என்பதனை ஆராய்வதே இக் கட்டுரையின் பெரு நோக்கமாகும்.

இதனால் கம்பர் அறிவில் தாழ்ந்தவர் என்று எவரும் கருதிவிடக் கூடாது. மணிவாசகனர் காலத்தால் முந்தியவராய் இருத்தலின் அவரது சொல்லும் பொருளும் தேவாரங்களில் காணக்கிடைப்பதனல் தேவார ஆசிரியர்கள் அறிவிலே தாழ்ந்தவர்கள் என எவரேனும் கருதுவரோ! கருதார் அன்றே!

இனி அன்பிற் பெரியராம் சேக்கிழாரது செய்யுட்களோடு, கல்வியிற் பெரியராம் கம்பரது செய்யுட்களை ஒத்திட்டுக் காண்போம்.

அருண்மொழித்தேவர் என்னும் சேக்கிழார் தாம் பாடப்போகும் பெரியபுராணமாகிய திருத்தொண்டர் புராணம் இடையூறின்றி

இனிது முடிய இறைவணக்கமாக,

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்திவ ணங்குவாம்

என்பதைப்பாடி அமைத்துள்ளார்.

கல்விக் கடலாம் கம்பநாட்டாழ்வாரும் தமது இராமாயணத்தில் கடவுள் வணக்கமாக,

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே

என, இவ்வாறு பாடி அமைத்துள்ளார்.

இவ்விரு செய்யுட்களையும் உற்றுநோக்குவோர்க்கு இருபெரும் புலவரது கருத்து ஒருமைப்பாடு தெற்றென விளங்காநிற்கும். சேக்கிழார் இறைவணக்கச் செய்யுளைக் கலி விருத்தத்தில் அமைத்துப் பாடினர். கம்பரும் அவ்வாறே அப்பாவில் புனைந்து கொண்டனர்; "உலகெலாம்" என்னும் தொடரையே "உலகம் யாவையும்" எனக் கம்பர் அமைத்துக்கொண்டனர். "அலகில்" என்னும் சொல்லை "அலகிலா" எனக் கூறினர். பொருள் வேறுபாடு இருசெய்யுட்களுக்கும் இருப்பினும் சேக்கிழாரது சொல்லாட்சி கம்பரது பாவில் அமைந்திருப்பதை நோக்குக. சொற்கள் எவருக்கும் பொது எனினும் இடத்திற் கேற்ப அமைத்துக்கொண்டதே ஈண்டுக் கருதற்பாலதாம்.

சேக்கிழார் தேவார காலத்திற்குப் பிற்பட்டவர் ஆதலின், தம் கால மரபுப்படி விநாயகர் வணக்கத்தையும் தமது நூலில் அமைக்கின்றனர். அது,

எடுக்கு மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்

என்பது,

சேக்கிழார் சுவாமிகள் தாம் பாடப்போகும் பெரியபுராணமாகிய மாக்கதை நல்ல முறையில் நடக்க விநாயகக் கடவுளைக் கருத்தில் எண்ணுவோம் என்கின்றனர். கம்பர் சேக்கிழார் எடுத்துக்கூறிய மாக்கதை என்னும் அழகிய தொடர் தமது நூலில் தகுந்த இடத்தில் மிளிரவேண்டும் என்னும் கருத்தால் தமது இராமாயணமாகிய மாக்கதை தம்மை ஆதரித்த திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலது ஊரில் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்பதை,

நடையின் நின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநி கழ்ந்தவி ராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே

எனக்கூறியுள்ளார்.

இனிச் சேக்கிழாரது அவையடக்கப் பாடலையும், கம்பரது அவையடக்கப் பாடலையும் கவனிப்போம். சேக்கிழார் "அடியார்கள் அளவிலாத பெருமையையுடையவர், அவரது அளவிலாத புகழைக் கூறப் போகிறேன். என்னல் அவர்களது புகழை ஒரு சிறிதும் கூறல் அருமையவாயினும் அளவில்லாத ஆசை என்னைத் தூண்டச் சொல்லுகிறேன் என்றும், அவ்வாறு சொல்வது ஒரு பெரிய பாற்கடலைக் கண்ட ஒரு பேராசை பிடித்த நாய் இதனை முழுமையும் குடித்து விடுகிறேன் பார் என்று சொல்வது போலாம் என்றும், நாய் எப்படி முற்றிலும் கடலைக் குடிக்க இயலாதோ அப்படி அடியார் புகழ் முற்றிலும் சொல்ல முடியாதென்றும், ஆனல் நாய்க்கிருக்கும் ஆசை போல் தமக்கும் ஆசை பெரிதென்றும் பொருத்தமான உவமை காட்டி விளக்கினர். இக்கருத்துக்களே கீழ்க்காணும் இருசெய்யுட்களில் பொதிந்து கிடக்கின்றன. அவை,

அளவி லாதபெ ருமையர் ஆகிய
அளவி லாவடி யார்புகழ் கூறுகேன்
அளவு கூடவு ரைப்பரி தாயினும்
அளவி லாசைது ரப்பவ றைகுவேன்

தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொருவ ருஞ்சீர்ப் புகலுற் றேன்முற்றப்
பெருகு தெண்கடல் உற்றுண் பெறுநசை
ஒருசு ணங்கனை ஒக்குந்த கைமையேன்—என்பன.

இவ்விரு செய்யுட்களின் கருத்தைக் கம்பர் வெகு அழகாக ஒரு செய்யுளில் திறம்பட அமைத்துள்ளார். இவ்வாறு கம்பர் விரிந்தவற்றைச் சுருங்கிய முறையில் சொல்வதும், சுருங்கியவற்றை விரிவாகக் கூறுவதும் அவர் செய்யும் சித்திரங்களாகும். இத்தகைய காரணங்களாலேயே "கம்பசித்திரம்" என்னும் தொடரும் கம்பரது பாடற்கு வழங்குவதாகும். கம்பர் ஒரு கருத்தைமட்டும் சிறிது மாற்றினர். சேக்கிழார் தம்மை நாய் என்றனர். கம்பர் தம்மைப் பூனை எனக் கூறுகின்றனர். ஏனையவை ஒற்றுமையாகக் காணப்படுகின்றன. கம்பரது பாடல் பின்வருமாறு.

ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றுபு நக்குபு புக்கென
ஆசை பற்றிய றையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ

இதன் பொருள் ஓசையுடைய பாற்கடலை ஒரு பூனை அடைந்து முற்றிலும் நக்கி விடுவேன் என்பது போல நானும் ஆசையினல் இராமன் கதையைச் சொல்ல ஆரம்பித்தேன் என்பதாம்.

சேக்கிழாரது இருபாடல்களில் எட்டு வரிகள் உள்ளன. அவ்வெட்டு அடிகளில் கம்பருக்கு வேண்டிய மூன்று மாணிக்கம் போன்ற அடிகள் பொருந்தி யுள்ளன. அவற்றையே பொறுக்கிக்கொண்டு கம்பர் தமது பாடலில் மூன்று அடிகளில் அமைத்துக் கொண்டனர் என்பதை அறிஞர் அறிந்து இன்புறுவாராக.

இனி ஆற்று வர்ணனைப் பகுதியில் நமது கருத்தைச் செலுத்துவோம். சேக்கிழார் பெருமான் காவிரியாற்றைக் கூறுகையில் " அது

திருப்பருப்பதமலையில் தோன்றும் ஆறுகளில் முதன்மையானது. பூ மகளுக்குச் செவிலித்தாய் போன்றது. உலகத்துயிர்களை எல்லாம் வளர்த்து நீராகிய அமிர்தத்தைத் தினமும் ஊட்டவல்லது என்னும் பொருள்பட,

> சையமால் வரைபயில் தலைமை சான்றது
> செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது
> வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
> உய்யவே சுரந்தளித் தூட்டும் நீரது

என்று பாடியுள்ளார்.

சேக்கிழார் ஆற்றைச் செவிலித்தாய் என்றதை மனத்தகத்துக் கொண்ட கம்பர்பிரான் தாம் கூறப்புகும் ஆற்றைத் தாய்முலை என அமைத்துக் கொண்டனர். வளர்க்கும் முறையில் இரு உவமைகளும் பொருத்தமானவையே. கம்பர் பாடிய பாடல்,

> இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
> பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
> சரயு வென்பது தாய்முலை யன்னதிவ்
> வுரவு நீர்நிலத் தோங்குமு யிர்க்கெலாம்

என்பது. சேக்கிழார் சொல்லும் சொல்முடிபாகிய 'சான்றது' 'போன்றது' 'நீரது' என்பன போலவே கம்பரும் "பூண்டது, அன்னது" என்று பாடுகின்றனர்.

இனி இப்பேராசிரியர்கள் எழுதிய நூற்களுக்குள்ளே சென்று பார்ப்போம். திங்களூர் என்னும் ஊரில் அப்பூதி அடிகள் என்னும் அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் திருநாவுக்கரசரிடம், அவரைப் பார்ப்பதற்கு முன்பே அளவு கடந்த அன்புடையவராய் அவரே தமது வழிபடும் கடவுள் எனக்கொண்டு தாம் நடாத்திவந்த தண்ணீர்ப் பந்தல் முதலியவற்றிற்குத் திருநாவுக்கரசரது திருப்பெயரையே இட்டு மகிழ்ந்து வந்தார். திருநாவுக்கரசர் திங்களூர் வழியாக வந்தபோது அவரது திருப்பெயர் இருக்கக்கண்டு அதன் வரலாற்றை யுணர அப்பூதி அடிகளார் இல்லத்திற்கு வந்தனர்.

அப்பூதியடிகள் தமது இல்லத்திற்குத் திருநாவுக்கரசரே வந்துள் ளனர் என்பதை உணராமல், திருநாவுக்கரசரது சைவவேடப் பொலி வில் ஈடுபட்டவராய் உள்ளம் பூரித்துப் பெருமகிழ்ச்சிகொண்டு அப்பர் பெருமானின் திருவடிகளை வணங்கினர். அப்பரும் அடிகள் தம்மை வணங்குவதற்கு முன்னே அவரை எதிர் வணங்கினர். உடனே அடிகள் பெரும் வியப்போடு "அருள் ஒழுகும் சைவ வேடத்துள்ளீரே நீர் என் மனையில் எழுந்தருளுதற்கு யான் இம்மையிலும் மறுமையி லும் எத்துணை தவம் செய்தேனோ! தாங்கள் எது கருதி எம் மனை வந்துற்றீரோ" என்று வினவினர். இவற்றைச் சேக்கிழார்,

> கடிதணைந்து வாகீசர் கழல்பணிய மற்றவர்தம்
> அடிபணியா முன்பணியும் அரசினெதிர் அந்தணனார்
> முடிவிறவம் செய்தேன்கொல் முன்பொழியும் கருணைபுரி
> வடிவுடையீர் என்மனையில் வந்தருளிற் றென்னென்று

மேலே உள்ள இரு அடிகளைக் கம்பர் தமது நூலில் எடுத்

தாளும் திறத்தை நோக்குவோம். இராமாயண பால காண்டத்தில் கையடைப் படலத்தில் விசுவாமித்திரர் தயரதன் அரண்மனையை வந்தடைதலுற்றூர். இவ்விடத்தையே கம்பர் மேற்காட்டிய அடிகளின் கருத்தை யாளத்தக்க இடமாகக் கொண்டார். எங்ஙனம் அப்பூதியடிகள் தமது இல்லம் நோக்கி வந்த அப்பர் சுவாமிகளை வரவேற்றனரோ, அதுபோல இங்குத் தயரதப்பெயர் வள்ளல் விசுவாமித்திரர் முனிவரை வரவேற்கின்றனர். அவ்வாறு வரவேற்கையில்,

நிலஞ்செய் தவமென் றுணரின் அன்றுநெடி யோயென்
நலஞ்செய் வினையுண் டெனினும் அன்றுநகர் நீயான்
வலஞ்செய் துவணங் கவெளி வந்தவிது முந்தென்
குலஞ்செய் தவமென் றினிது கூறமுனி கூறும்.

எனக்கூறி வரவேற்றனர்.

இதன்பொருள் "முனிவரே" தாங்கள் எனது அரண்மனை நோக்கிப் போந்ததற்குக் காரணம், இந்நிலம் செய்தவமோ எனில் அதுவும் அன்று. நான் செய்த புண்ணியத்தின் பயனே எனில் அதுவும் அன்று. நான் வணங்க, நீர் இவ்வளவு எளிதாக வந்த இது எம்முன்னோர் செய்ததவமாகும்" என்பதாம். சேக்கிழார் கூறிய இரண்டடிகட்கு இது ஒரு விரிவுரை போன்று திகழ்கிறது. அப்பரும் ஒரு முனிவரே. விசுவாமித்திரர் முனிவர் என்பதில் ஐயமில்லை. இருவரை வரவேற்றவர்களும் இல்லற நெறியினர். முன்னவர் அந்தணர், பின்னவர் அரசர். இதுவே வேற்றுமை.

இனி அதே கையடைப்படலத்தில் சேக்கிழாரது வாக்கையும் கருத்தையும் கம்பர் தழுவியுள்ளதை நோக்குவோம்.

சிறுத்தொண்டர் ஒரு சிவனடியார். அவர் தினமும் அடியார்களுக்கு அன்னம் இடாது தாம் அருந்தாத தவவிரதமுடையவர். அவ்வாறு ஒழுகும் நாளில், ஒருநாள் எந்தச்சிவனடியாரும் அவருடைய கண்ணுக்குப் புலனாகவில்லை. இத்தருணம் இறைவனார் ஒரு பைரவர் வேடம் பூண்டுவர, அவரைச் சிறுத்தொண்டர் கண்ணுற்றுக் கடல் நடுவே கரைகாணாது கலக்கமுற்ற ஒரு கப்பலோட்டிக்கு ஒரு கரை காணின் அவன் களிப்படைவதுபோலப் பெருமகிழ்ச்சியடைந்து அவரைத் தமது இல்லத்திற்கு அமுதருந்த அழைத்தார்.

அவ்வாறு அழைத்ததற்குப் பயிரவர், சிறுத்தொண்டரது நற்குணத்தையும் அடியாரிடத்து அவர் கொண்டுள்ள அன்பையும் அறிந்து இன்புற்று அவரது திருத்தொண்டின் உறைப்பை உலகறியச் செய்ய, தொண்டரே நான் உண்பது நரமாமிசமாகும். அந்நரப் பசுவும் ஐந்தாண்டு பிராயத்ததாக இருக்கவேண்டும். அத்துடன் உடல் உறுப்புக்களில் பின்னம் உறாததாக இருக்கவேண்டும். இவற்றோடு மற்றொன்று சொல்லப்போகிறேன். அது நன்கு புண்ணாகியுள்ள நோவு மிகுந்த இடத்தில் வேலைக் குத்தினதுபோல் இருக்கும். "அதாவது மகனைத் தாய் பிடிக்கத் தந்தை அறுக்கவேண்டும்" என்பதாம் என்றனர். இப்பொருள்கள் நன்கு பொதிய அருண்மொழித் தேவராம் சேக்கிழார் சுவாமிகள்,

பண்பு மிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரும்
நண்பு மிக்கீர்! நாமுண்ணப் படுக்கும் பசுவும் நரபசுவாம்
உண்ப தஞ்சு பிராயத்தில் உறுப்பின் மறுவின் றேலின்னம்
புண்செய் கோலில் வேலெறிந்தாற் போலும் புகல்வ தொன்றென்றூர்

இதுபோன்று மக்கட் பிரிவைப்பற்றிய நிகழ்ச்சி தயரதன் வாழ்க்கையில் நிகழ்கிறது. சிறுத்தொண்டர் புராணத்தில் மகன் இறக்க நேரிடுகிறது. தயரதன் வாழ்க்கையில் சிலகாலம் தன் மக்களைப் பிரிந்திருக்க நேரிடுகிறது. விசுவாமித்திரர் தயரதனை நோக்கி, 'மன்னு யான் இயற்றும் வேள்வியைப் பல அரக்கர் கெடுத்தொழிக்கின்றனர். ஆதலின் அவ் வேள்வி முடியும்வரை அதைக் காத்திருக்க உனது மகனுன இராமனை, என்னுடன் அனுப்பிவை என்று கேட்கின்றனர். இதுகேட்டுத் தயரதன் உற்ற நிலைமை,

எண்ணிலா வருந்தவத்தோன் இயம்பிய சொல்
மருமத்தில் எறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தால்
எனச் செவியில் புகுதலோடும்
உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
வாருயிர்நின் றூசலாடக்
கண்ணிழந்தான் பெற்றிழந்தான் எனவுழந்தான்
கடுந்துயரங் காலவேலான்'

என வெகு அழகாகக் கூறியுள்ளார். அதாவது விசுவாமித்திரர் சொன்ன சொல் புண்பட்ட மார்பில் மீண்டும் நெருப்பு நுழைந்தது போலச் செவியில் சென்றது. அதனுல் துன்பம் மேலிட்டு உயிர் ஊசலாடிற்று. பிறவிக் குருடனுக இருந்தவன் இறையருளால் கண் பெற்று மீண்டும் இழந்தால் எப்படி அலமருவானே அத்தகைய துன்பத்துள் ஆழ்ந்தான் தயரதன் என்பதாம்.

மக்கட்பிரிவுக்குச் சேக்கிழார் காட்டிய உவமையையே கம்பரும் இடம் அறிந்து அமைத்துக்கொண்டது எத்துணைப் பொருத்தமாய் இருக்கிறது என்பதை நேயர்கள் உய்த்துணர்ந்துகொள்க.

இராமாயண அயோத்தியா காண்டத்திலும் சேக்கிழாரது சொல்லையும் பொருளையும் பொன்னேபோல் கம்பர் போற்றி யாண்டிருப்பதைப் பார்ப்போம்.

பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்னும் ஊரில் நாகன் என்னும் வேடன் வேடுவர்க்கு அரசனுக விளங்கினுன். அவனுக்கு இறைவன் அருளால் ஓர் ஆண் மகவு தோன்றியது. அதற்குத் திண்ணனூர் எனுந் திருப்பெயரிட்டு இனிது வளர்த்துவந்தான். திண்ணனூரும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து அரசு ஏற்று நடத்துதற்கு ஏற்ற பருவமும் நண்ணி விளங்கினர். அது கண்ட நாகன் தனது அரசைத் தன் மகனூர்க்கு அளிக்க எண்ணினன்.

எண்ணிய அரசனுன நாகன் தமது ஏவலாளர்களை அனுப்பித் தனது மகனுரை அழைத்துவர ஏவினுன். திண்ணனூரும் மைந்நாக பருவதம் வருவதுபோலத் தமது கறுத்த முடியில் மாலைகளைச் சூடி வேடர்கள் தம்மை வணங்கிவரத் தமது தந்தையாம் நாகனது திருவடிகளை வணங்கினர். அதுபோது நாகன் தனது அருமருந்தன்ன குமரனு

ருடைய செய்குன்று பருத்துத் திரண்டு உருண்ட தோள்களைத் தனது இருபுயத்தாலும் அழுந்தத் தழுவித் தான் அமர்ந்திருந்த புலித் தோலின்மேல் தன்மகனையும் அமர்த்திக்கொண்டனன். இந் நிகழ்ச்சியைச் சேக்கிழார்,

தெய்வநிகழ் குறமுதியாள் சென்ற பின்பு
திண்ணனார் திருத்தாதை அழைப்பச் சீர்கொள்
மைவிரவு நறுங்குஞ்சி வாசக் கண்ணி
மணிநீல மலையொன்று வந்த தென்னக்
கைவிரவு சிலைவேடர் போற்ற வந்து
காதல்புரி தாதைகழல் வணங்கும் போதில்
செய்வரைபோற் புயமிரண்டுஞ் செறியப் புல்லிச்
செழும்புலித்தோல் இருக்கையின்முன் சேர வைத்தான்

எனத் திறம்படச் செப்பியுள்ளார்.

கம்பரும் தமது அயோத்தியா காண்டத்தில் மந்திரப்படலத்தில், தயரதனும் தனது நாட்டாட்சியை இராமனுக்குக் கொடுப்பதற்காக அழைப்பித்து, இராமன் தன்னை வணங்கியபோது, தயரதன் இராமனைத் தன் மார்போடு தழுவினதாகக் கூறுகிறார். அதற்குச் செய்யுள்

மாத வன்றனை வரன்முறை வணங்கிவா ளுழவன்
பாத பங்கயம் பணிந்தனன் பணிதலும் அனையான்
காதல் பொங்கிடக் கண்பனி யுகுத்திடக் கனிவாய்ச்
சீதை கொண்கனைத் திருவுறை மார்பகஞ் சேர்த்தான்

என்பது. இதன் பொருள் வந்த இராமன் வசிட்டரது திருவடிகளை வணங்கிப் பிறகு, தயரதனது கழலடிகளையும் வணங்கினன். தயரதன் இராமனை எடுத்து மார்போடு சேர்த்துக் கட்டித்தழுவினன் என்பதாம்.

திண்ணனும், இராமனும் ஆகிய இரண்டு அரசிளங் குமரரும் தமது தந்தையராம் நாகனையும் தயரதனையும் வணங்கினர். தந்தைமார் இருவரும் தம் மக்களை மார்போடு தழுவினர். அருள்மொழித் தேவராம் திரு. சேக்கிழார் சுவாமிகள் தமது திருப்பாட்டில் நாகன் திண்ணனரது மலைபோன்ற தோள்களைப் புல்லினன் என்று வாளா கூறி அவ்வாறு புல்லியதற்குரிய காரணத்தை அறிஞர் உய்த்துணருமாறு வாளாவிடுத்து மேற்சென்றனர். இவ்வாறு விட்டுச் சென்றதைக் கம்பர் நுணுகி ஆராய்ந்து அதற்கு ஒரு விரிவுரை செய்வார் போன்று பின்வரும் கவியைக் கவினுறப் புனைவாரானர். அது,

நலங்கொள் மைந்தனைத் தழுவினன் என்பதென் னளிநீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்கல் அன்னதிண் தோளையும் மெய்த்திரு இருக்கும்
அலங்கல் மார்பையும் தனதுதோள் மார்புகொண் டளந்தான்

என்பது. இதன் பொருள் தனது பிள்ளையைத் தயரதன் ஏன், தழுவினன் எனில், தனக்குப் பின்னல் இராமன் நிலத்தை ஆளும் திறன் அவனிடத்து உள்ளதா என்பதை அறிய நினைந்தவனாய் இராமனது தோளையும் மார்பையும் அளந்தான் என்பதாம். இப் பாட்டும் பொருளும் சேக்கிழார் கூறிய "செய்வரை போற்புயம் இரண்டும் செறியப்புல்லி" என்பதற்கு விரிவுரை என்பதில் ஐயம் இல்லை என்பதை அறிஞர் அறிவாராக.

(தொடரும்)